**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 62/2023 DW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சரவணன் | த–பெ /க.பெ. | சுப்பு |
| ஊர்: | : | கோட்டையூர் | சமயம்: | |
| வயது: | : | 54/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | அடகு கடை | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.05.2026**

---------------------------------------------------------------------------------------------------

**18.05.2026**

**குறுக்கு விசாரணை:**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10ம் வகுப்பு படித்துள்ளேன். நான் 15 ஆண்டுகளாக அடகு கடை தொழில் நடத்திவருகிறேன் என்றால் சரிதான். தங்கத்தை ஈடாக வைத்து கடன் கொடுப்பேன் என்றால் சரிதான். கடன் கொடுப்பதற்கு புரோநோட் மற்றும் காசோலை பெறுவேன் என்றால் சரியல்ல, நகையை பெற்றுக்கொண்டு கடன் கொடுப்பேன். எவ்வளவு தொகை கடன் கொடுக்கப்பட்டது என்பதை எந்த ஆவணத்தில் குறியீடு செய்வேன் என்றால் பில் மூலமாக லெட்ஜரில் பதிவு செய்யப்படும். பில்லை வைத்து எவ்வளவு தொகை கடனாக பெறமுடியும் என்பதை கூறமுடியுமா என்றால் முடியாது. 2020ல் இருந்து 2025 வரை எவ்வளவு கடன் கொடுத்தேன் என்றால் என் ஆவணங்களை பார்த்தால் தெரியும் குறிப்பாக தெரியாது.

2) ரூ.6 லட்சம் புகார்தாரரிடம் இருந்து கடன் பெற்றதாக முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். ரூ.6 லட்சம் தொகைக்கும் புரோநோட் மற்றும்

காசோலை புகார்தாரருக்கு கொடுத்திருப்பதாக கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். **11.04.2020 தேதியுடைய புரோநோட் ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ம.சா.ஆ.6 ல் உள்ள கையொப்பம் எனதென்றால் சரிதான், ஆனால் ம.சா.ஆ.6 ஆவணம் நிரப்பாமல் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்தேன். 15 வருடங்களாக கடன் கொடுக்கும் தொழில் செய்யும்பட்சத்தில்புரோநோட்டை பூர்த்தி செய்யாமல் கொடுக்ககூடாது என்ற விபரம் எனக்கு தெரிந்திருக்கும் என்றால் தெரியாது. ம.சா.ஆ.1 ஆவணம் வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் எனது என்றால் சரிதான், காசோலையை நான் நிரப்பவில்லை.

3) எனது தொழில் தொடர்பான வங்கி வரவு செலவு எத்தனை ஆண்டுகளாக பார்க்கிறேன் என்றால் கடந்த 10 ஆண்டுகளாக வைத்துள்ளேன். நகை அடகு கடன் தொகை காசோலை மூலமாக நான் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. வங்கி மூலமாக கடன் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்ததில்லை. எனது வங்கியில் இருந்து பணம் எடுக்கவேண்டும் என்றால் எவ்வாறு எடுப்பேன் என்றால் withdrawal ரசீது மூலமாக பெறுவேன். withdrawal ரசீது மூலமாக பணம் எடுக்கும்பட்சத்தில் எதற்காக காசோலை புத்தகம் நான் எனது வங்கியில் இருந்து பெற்றுள்ளேன் என்றால் பணம் எடுப்பதற்கு தேவைப்படும் என்பதால். பூர்த்தி செய்யாமல் காசோலை கொடுப்பது சட்டப்படி தவறு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. செக்யூரிட்டிக்காக காசோலை கொடுத்தேன். புகார்தாரருக்கு நான் கொடுத்த நிரப்பாத புரோநோட் மற்றும் காசோலையை பூர்த்தி செய்வதற்க சட்டப்படி அதிகாரம் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ம.சா.ஆ.1 மற்றும் 6 நான் பூர்த்தி செய்து கொடுத்த ஆவணங்கள் என்றாலும், வழக்கிற்காக பூர்த்தி செய்யாதது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4) எனது அடகு கடை காரைக்குடி, புதுவயலில் உள்ளது என்றால் சரிதான். புகார்தாரர் கண்டனூரில் உள்ளார் என்றால் சரிதான். புகார்தாரர் புதுவயலில் உள்ள IOB வங்கியில் காசோலை செலுத்தி திருப்பப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். நான்

புதுவயலில் தொழில் செய்வதால் வங்கியில் எனது அதிகாரத்தை பயன்படுத்தி ரிட்டன் ரசீது தாமதமாக புகார்தாரருக்கு கிடைக்கும்படி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.5 ஒப்புகை அட்டையில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். ம.சா.ஆ.5 ல் தேதி 11.02.2023 என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அடகு கடையின் பெயர் முனீஸ்வரா பைனான்ஸ் என்றால் சரிதான். முனீஸ்வரா பைனான்ஸ் நிறுவனத்திற்கு 10.02.2023 ல் ம.சா.ஆ. 4 அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். **( புகார்தாரரின் ஆதார் கார்டு, பான் கார்டு, குடும்ப அட்டை, எலக்சன் கார்டு சான்றிட்ட நகல் ம.சா.ஆ.7,8,9,10 ஆக குறியிடப்படுகிறது – ஆவணங்கள் அசலுடன் ஒப்பிடப்பட்டுள்ளது )** ஆவணங்களில் உள்ள புகைப்படம் புகார்தாரின் புகைப்படம் என்றால் சரிதான். ம.சா.ஆ.7–10 ல் பெயர் ராக்கம்மாள் என்று குறிப்பிட்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் எனக்கு ராக்கம்மாள் என்ற பெயர் யார் என்றே தெரியாது, எனக்கு தெரிந்தது ராதா மட்டும்தான் (தற்போது நீதிமன்றத்தில் வந்துள்ள புகார்தாரரைதான் ராதா என்று குறிப்பிடுகிறேனா என்றால் புகார்தாரரைத்தான் ராதா என்று கூறுகிறேன். )

5) எ.ம.சா.ஆ.1 முதல் 4 ஆவணங்கள் புகார்தாரருக்கு தொடர்புடையது இல்லை என்றாலும், காவல் அதிகாரத்தை வைத்து பொய்யாக தயார் செய்த ஆவணம் என்றாலும் சரியல்ல. புகார்தாரருக்கு தொடர்புடையதுதான். எ.ம.சா.ஆ.1–4 ஆவணங்களில் ராக்கம்மாள் என்று எந்த ஒரு குறிப்பும் இல்லை என்றால் புகார்தாரர்தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். எ.சா.ஆ.1–4 ஆவணங்களுக்கு எந்த ஒரு சாட்யமும் இல்லை என்றால் உள்ளது. ஆவணங்கள் தொடர்பான தனிப்பட்ட நபர் சாட்சியை விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். நான் வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக உண்மைகக்கு புறம்பாக எ.ம.சா.ஆ.1 ல் இருந்து 4 தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு காசோலை 10.01.2023 ல் பூர்த்தி செய்து புகார்தாரருக்கு கொடுத்தேன் என்றாலும், அந்த தொகையை கொடுக்க நான் கடமைபட்டவர் என்றாலும் சரியல்ல. 2018 ல் நிரப்பாமல் செக்யூரிட்டிக்கா கொடுத்து வைத்திருந்தது. 2018 ல் எனக்கும் புகார்தாரருக்கும்

இடையே நான் சொன்னவாறு எந்த ஒரு கொடுக்கல் வாங்கலும் இல்லை என்றால் சரியல்ல.  அனைத்து பணத்தையும் திருப்பி கொடுத்ததாக கூறியிருக்கும் பட்சத்தில் பணத்தை கொடுத்த பின்பு காசோலை மற்றும் புரோநோட்டை திருப்பி கேட்டு என்ன சட்ட நடவடிக்கை எடுத்தேன் என்றால் சட்ட  நடவடிக்கை எடுக்கவில்லை, வாய்மொழியாக கேட்டேன், மீண்டும் பணம் தரவேண்டும் என்று புகார்தாரர் என்னை கேட்டார். நான் வட்டி தொழில் செய்துவரும்பட்சத்தில் வாய்மொழியாக ஆவணங்களை திருப்பி கேட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் பிரிவு 138 மாற்றுமுறை ஆவண சட்டத்தின் படி குற்றம் புரிந்தவன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.4 ஆவணம் அறிப்பை பற்றி நான் எந்த ஒரு பதில்அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் அறிவிப்பை நான் பெறவில்லை. எனது சாட்சியம் முரணாக உள்ளது என்றாலும், ஏற்கும்படி இல்லை என்றாலும் சரியல்ல. புகார்தாரர் மனுப்படி தீர்ப்பு பெற தகுதி உடையவர் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.05.18 18:15:37 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.